**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 81–2025

| L.W.1 P.W.1 | | |
|---|---|---|
| Name: | பார்வதி | Caste: |
| Husband's Name: | மாரியப்பன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026
(எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வந்தேன், தற்போது உடல் சுகமின்மை காரணமாக வேலைக்கு செல்லவில்லை. கடந்த 18.06.2023–ஆம் தேதி, மதியம் 02.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது இரண்டாவது மகன் சிவக்குமாருக்கும், அவரது மனைவி சீதாவிற்கும் இடையே வாய் தகராறு நடந்தது. பக்கத்து வீட்டில் வசித்து வரும் சுரேஷ் என்பவர் எனது மருமகள் சீதாவிடம் தவறான தொடர்பு இருந்தது. அது சம்பந்தமாக எனது மகனுக்கும், மருமகளுக்கும் இடையே தகராறு நடந்தது. அப்போது பக்கத்து வீட்டில் வசித்து வரும் சுரேஷ், அவரது வீட்டிலிருந்து கட்டையை எடுத்து வந்து எங்கள் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த , எனது மகனின் தலையில் அடித்ததில், ரத்தம் வழிந்தது. நான் சத்தம் போட்டுக் கொண்டே எனது மகனை அடிக்காமல் தடுக்க முற்பட்டபோது, கட்டையால் எனது நெஞ்சில் எதிரி சுரேஷ் அடித்தார்.

பின்னர், எனது வீட்டு வாசலில் நின்று கொண்டு எனது மகனை குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே என்று தகாத வார்த்தைகளில் திட்டினார். அப்போது எனது தெருவில் இருந்த அக்கம் பக்கத்தினர்கள் கூடிவிட்டனர். அதன் பின்னர், காயம்பட்ட எனது மகனை உறவுக்கார நபரிடம் உள்ள இருசக்கர வாகனத்தில் வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக மாலதி என்பவர் அழைத்துச் சென்றார். மற்றொரு இருசக்கர வாகனத்தில் வேதாரண்யம் அரசு மருத்துவமனைக்கு நானும், சிகிச்சைக்காக சென்றேன். எனது மகனுக்கு தலையில் முதலுதவி சிகிச்சை மட்டும் செய்துவிட்டு,

பின்னர் உடனடியாக மேல் சிகிச்சைக்காக நாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 4 நாட்கள் சிகிச்சையில் இருந்துவிட்டு, அங்கிருந்து திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார். எனக்கு ஏற்பட்ட வலிக்கு நான் வெளிப்புற நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். தற்போது **என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் வாக்குமூலமானது அ.த.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**</u>

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 20.04.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

## C. C. No. 81–2025

| L.W.2 P.W.2 | | |
|---|---|---|
| Name: | சிவக்குமார் | Caste: |
| Father's Name: | மாரியப்பன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:39/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026
<u>(எதிரி ஆஜர்.)</u>

**<u>முன் விசாரணை:</u>**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மா. கடந்த 18.06.2023–ஆம் தேதி, மதியம் 02.30 மணியளவில் நானும், எனது மனைவி சீதாவும் எனது வீட்டு வாசலில் குடும்ப தகராறு சம்பந்தமாக பிரச்சினை செய்து கொண்டிருந்தபோது, பக்கத்து வீட்டில் வசித்து வரும் சுரேஷ் என்பவருடன் ஏற்கனவே எனது மனைவிக்கும் அவருக்கும் தவறான தொடர்பு இருந்ததை கண்டித்ததை தொடர்பாக இருந்த முன்விரோதத்தை மனதில் வைத்துக் கொண்டு என்னை, குச்சிக்காரி மகனே, தேவடியாக மகனே என்று தகாத வார்த்தைகளில் திட்டி, எனது வலதுபக்க மேல் தலையில் கட்டையால் அடித்து, காயத்தை ஏற்படுத்தினார். அதன் பிறகு, எனக்கு சுயநினைவு இல்லை. நான் கண் விழித்தபோது நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். எனக்கு தலையில் வேதாரண்யம் அரசு மருத்துவமனையில் 15 தையல்கள் போடப்பட்டது. பின்னர், திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு 12 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 20.04.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 81–2025**

| L.W.4 P.W.3 | | |
|---|---|---|
| Name: | சிவக்குமார் | Caste: |
| Father's Name: | ராஜகிளி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:34/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026 (எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். சுமார் தேதி, மாதம் நினைவில்லை. 2, 3 வருடங்களுக்கு முன்பு நான் மதியம் வீட்டில் உணவு அருந்தி கொண்டிருந்தபோது, வெளியில் பக்கத்து வீட்டில் சத்தம் கேட்டது. அப்போது, சுரேஷ்–க்கும் மாரியப்பன் மகன் சிவக்குமாருக்கும் இடையே தகராறு நடந்தது. அதன் பின்னர் சிவக்குமாரின் தலையில் ரத்தம் வடிந்தது. அவரை அவருடைய உறவுக்காரப் பெண் மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

வாய்ப்பு கொடுக்கப்பட்டும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 20.04.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 81-2025**

| L.W.5 P.W.4 | | |
|---|---|---|
| Name: | லதா | Caste: |
| Husband's Name: | ராஜகிளி | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.04.2026 (எதிரி ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது அகஸ்தியன்பள்ளி, பூவன்தோப்பில் குடியிருந்து உப்பளத்தில் வேலை செய்து வருகிறேன். வழக்கு சம்பந்தமா எனக்கு எதுவும் தெரியாது. நான் உப்பளத்தில் வேலை பார்த்துவிட்டு, வீட்டிற்கு வந்து அயர்ந்து தூங்கி விட்டேன். கண் விழித்து பார்த்தபோது சிவக்குமாருக்கு அடிபட்டுவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியளிக்காததால் அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோள்படி இந்திய சாட்சிய சட்டம் பிரிவு 154/ பிரிவு 157 BSA-ன் படி விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**அரசு தரப்பில் விசாரணை**

அ.சா.1, 2 மற்றும் எதிரி எனது பக்கத்து பக்கத்து வீட்டில் வசித்து வரும் உறவுக்காரர்கள் என்றால் சரிதான். நான் வழக்கமாக வேலைக்கு எப்போது செல்வேன் என்றால், இரவு 2 மணிக்கு சென்று மதியம் 1 மணிக்கு வீட்டிற்கு வந்து விடுவேன். கடந்த 18.06.2023 அன்று மதியம், 02.30 மணியளவில் நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரி. அன்றைய தினம், அ.சா.2 சிவக்குமாருக்கும், அவரது மனைவிக்கும் இடையே தகராறு நடந்தது தெரியுமா என்றால், வழக்கமாக நடப்பதுதான், தெரியும். எது சம்பந்தமாக அவர்கள் இருவருக்குள்ளும் தகராறு என்றால், எதிரிக்கும் அ.சா.2-இன் மனைவிக்கும் இடையே தவறான தொடர்பு இருந்தது சம்பந்தமாக, அதேபோல் கடந்த 18.06.2023 அன்று கணவன், மனைவிக்கு இடையே தகராறு நடந்தபோது, எதிரி

சுரேஷ் கட்டையை எடுத்து வந்து அ.சா.1, 2 –ஐ அடித்து, காயத்தை ஏற்படுத்தியதாகவும், அதனை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் விசாரணையிலும், வாக்குமூலத்திலும் கூறிவிட்டு, தற்போது எதிரியும் உறவுக்காரர் என்பதால் அவரை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இல்லை.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 20.04.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**